# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.

(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590


ஆணை நாள் 01.07.2026

முன்னிலை

**திரு.அ.விஜயராம், எம்.ஏ., பி.எல்.,**

**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். SA 14137/B/2024

திரு.A.முருகன் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
நிர்வாக அலுவலர்,
மண்டலம் - 4 (தெற்கு),
மதுரை மாநகராட்சி,
மதுரை மாவட்டம் - 625009. — பொது அதிகார அமைப்பு

**கோரிய தகவல்:** மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 12.01.2024 அன்று தாக்கல் செய்துள்ள மனுவில், வேறு நபர் வாங்கிய கடனுக்கு தனது சம்பளத்தில் பிடித்தம் செய்வது தொடர்பான தகவல்கள் வழங்க கோரி மொத்தம் 6 இனங்களில் மனு தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலரால் முழுமையான, சரியான தகவல்கள் வழங்கப்படவில்லை என தெரிவித்து, மேல்முறையீட்டாளரால் 05.11.2024 அன்று தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது இன்று (01.07.2026) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு.A.முருகன் அவர்கள் இன்று விசாரணைக்கு ஆஜரானார். |
| பொதுத் தகவல் அலுவலர் | பொதுத் தகவல் அலுவலர் திரு.சு.சிவகுமார், நிர்வாக அலுவலர், மண்டலம் - 4, மதுரை நகராட்சி, மதுரை மாவட்டம் அவர்கள் ஆஜரானார். |

## ஆணை

1. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு கடிதம் எண்.Z4A1/000375/2024, நாள்.27.09.2024 வாயிலாக தகவல்கள் வழங்கியுள்ளதாக தெரிவித்து, அதற்குண்டான ஆவண நகல்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்தார்.

2. இன்றைய விசாரணையில் ஆஜரான மேல்முறையீட்டாளர், பொதுத் தகவல் அலுலரால் வழங்கப்பட்ட தகவல்களில் இணைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் நீதிமன்ற உத்தரவு நகல் தனக்கு வழங்கப்படவில்லை எனவும், அதனை பெற்றுத்தருமாறும் கேட்டுக்கொண்டார். அதற்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரியுள்ள நீதிமன்ற வழக்கு உத்தரவினை 02.04.2026-க்குள் மேல்முறையீட்டாளருக்கு நேரில் வழங்குவதாக உறுதியளித்தார். இதனை இவ்வாணையம் ஏற்றுக்கொண்டு, கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது:

**மேற்படி பொதுத் தகவல் அலுவலர் உறுதியளித்ததன்படி, மேல்முறையீட்டாளர் சட்டப்பிரிவு 6(1) மனுவில் குறிப்பிடும் மதுரை மாவட்ட முதன்மை சார்பு நீதிமன்றத்தின் உத்தரவு நகலை மனுதாரருக்கு சட்டப்பிரிவு 7(6)-இன் கீழ் கட்டணமின்றி, சான்றொப்பமிட்டு தகவலாக வழங்கி, அதன் நகலையும், அதனை மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை கடிதத்தையும் இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து, இவ்வாணையத்திற்கு 14.08.2026-க்குள் விரைவு அஞ்சல் மற்றும் மின்னஞ்சல் (sicbsec1@gmail.com) மூலம் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டு, இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.**

**ஓம்/-(அ. விஜயராம்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

**<u>வழக்கு எண். SA 14137/B/2024</u>**

**<u>பெறுநர்</u>**

**<u>பொது அதிகார அமைப்பு:</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
நிர்வாக அலுவலர்,
மண்டலம் - 4 (தெற்கு),
மதுரை மாநகராட்சி,
மதுரை மாவட்டம் - 625009.

**<u>மேல்முறையீட்டாளர்:</u>**

திரு.A.முருகன்,
எண். 309, கிழக்கு வள்ளுவர் தெரு,
ஆலம்பட்டி, ஆண்டிப்பட்டி,
திருமங்கலம் வட்டம்,
மதுரை மாவட்டம் - 625706.

Copy to : File
AK/PC